1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. யாராவது அப்படி விலையை ஏற்றி விற்கிறார்கள் என்று அவர்களுடைய பெயரைக் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண். 245—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிதி நெருக்கடி நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசிடம் மானியம் ஏதும் கோரப்பட்டுள்ளதா ?

(இ) மானியம் கொடுக்கும் உத்தேசம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (ஆ) ஆம்.

(இ) கூட்டுறவுப் பதிவாளர் சங்கத்திடமிருந்து திட்டவட்டமான கோரிக்கைகள் கேட்டுள்ளார். வரப்பெற்றதும் அவை பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல்—9-20]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலேதான் அதிகமான அளவில் புகையிலை விவசாயத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் கூட்டுறவுத் துறை சங்கத்திற்கு நிதி உதவி செய்யாததின் காரணமாக அவர்கள் தனியார்களிடத்திலே சென்று அதிகமான அளவு வட்டி வீதத்தில் பணம் பெற்று விவசாயம் செய்தும், நிர்ப்பந்தத்தின் காரணமாக உற்பத்தி செய்த புகையிலையை பாதி விலைக்கு விற்று கடனை அடைக்கும்போதும் மறுபடியும் கடனாளிகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலித்து அவர்களின் கஷ்டத்தைப் போக்குகிற வகையில்.....

(மணியடிக்கப்பெற்றது.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் என்ற முறையில் பேசக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பொ. உத்திராபதி : அரசு அதை விரைவில் பரிசீலனை செய்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிதி உதவி வழங்கி, அந்த விவசாயிகளை பாதுகாக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே உற்பத்தியாகிற புகையிலையை பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 25 சத வீதம் கூட இந்தச் சங்கத்தின் மூலமாக கொள்முதல் செய்யப் பெறுவதில்லை என்ற தகவல் அரசுக்கு கிடைத்திருக்கிறது. அப்படி இச்சங்கம் அதனை கொள்முதல் செய்தாலும்கூட அதை மீண்டும் விற்பனை செய்கிறபோது நஷ்டம் பெருமளவில் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்த வகையில் அங்கே தனியார்களின் டாமினேஷன் இருப்பதாகச் சொல்லப்பெறுகிறது. அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமானால், புகையிலை தூள் பொட்டணம் தொழிற்சாலை ஒன்று அமைக்கப் பெறுமானால், இச்சங்கத்தின் மூலமாக கொள்முதல் அதிக அளவில் செய்து, நல்ல விற்பனைக்கு வெளியே விற்று சங்கமும் லாபம் ஈட்ட முடியும். அந்த வகையில் இச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரேனும் முன்வருவார்களேயானால், அத்தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு உதவும் வகையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர்கள் சங்கம் தற்போது நெருக்கடியான நிலையில் இருப்பதாக அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார். அந்தச் சங்கத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் தற்போது என்ன நிலையில் இருக்கிறார்கள்? அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப் பெறுகிறதா இல்லையா? அல்லது அவர்கள் பட்டினி கிடக்கிறார்களா? என்பதை தெரிவிப்பதோடு, அறிக்கை கேட்டுள்ளதாக கூறினார்களே, அரசாங்கம் கேட்டுள்ளதா? அல்லது கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளை கேட்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்திலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் பிரச்னை மட்டும் அல்ல, அந்தச் சங்கத்திலே அங்கத்தினர்களாக இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கிற புகையிலைக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்று சொன்னால் அனைவரும் கஷ்டப்பட நேரிடும். அந்த அளவு தனியார் டாமி

னேஷன் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அந்தப் பிரச்னைகளை நீக்கக் கூடிய முறையில் வழி வகை காண வேண்டும் என்றால் புகையிலை தூள் பொட்டணம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைத்தால் ஏற்படும் என்கிற செயற்குறிப்பும் இருப்பதாகச் சொன்னேன். அப்படி ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமேயானால், விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கும், சங்கமும் நஷ்டம் அடையாது, தொழிலாளர்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்கும் என்கிற அடிப்படையில் தான் அரசு இதைப் பரிசீலிக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கையை அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்துக் கொண்டிருக்கும் விவசாயிகளே எடுக்க முன்வருவார்களேயானால் அரசு அதற்கு நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை ஏற்படும். மற்றும் பல காரணங்களினாலும் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அந்தச் சங்கத்தினுடைய மூலதனம் என்ன ? இதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்கள் எவ்வளவு பேர் ? இப்பொழுது அதன் நிதி நிலைமை எந்த அளவில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கத்திலே 760 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 71,650 ரூபாயை அவர்கள் மூலதனமாக இச்சங்கத்தில் செலுத்தியிருக்கிறார்கள். அரசு இதில் 25,000 ரூபாய் மூலதனம் செலுத்தியிருக்கிறது. 1975–76 நீங்கலாக, 77-லிருந்து 80 வரை தொடர்ந்து இச்சங்கம் நட்டத்திலே தான் இயங்கிக் கொண்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

மதுராந்தகத்தில் புதிய நீதிமன்றங்கள்.

*வினா எண் 246 திரு.எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு அல்லது சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.